**மஹரகம நகர சபை**

**கொழும்பு மாவட்டம்**

------------------------------------------

## 1. நிதிக்கூற்றுக்கள்

---------------------------

### 1.1 நிதிக்கூற்றுக்கள் சமர்ப்பித்தல்

--------------------------------------------------

2019 ஆம் ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2020 மார்ச் 10 ஆந் திகதி கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டிருந்ததுடன் அந்த நிதிக்கூற்றுக்கள் தொடர்பான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் சுருக்கமான அறிக்கை 2020 ஆகஸ்ட் 13 ஆந் திகதியும் விரிவான முகாமைத்துவ கணக்காய்வு அறிக்கை 2020 ஆகஸ்ட் 21 ஆந் திகதியும் தலைவருக்கு அனுப்பிவைக்கப்பட்டது.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

----------------------------------------------------

எனது அறிக்கையின் முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படைப் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் தாக்கத்தினைத் தவிர்த்து மஹரகம நகர சபையின் 2019 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டுத் தத்துவங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.3 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

------------------------------------------------------------------------------------

**(அ) கணக்கீட்டுக் குறைபாடுகள்**

---------------------------------------------

| | கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (i) | 09 நிலையான வைப்புக்களுக்காக கிடைத்த வட்டியின் அடிப்படையில் ரூபா 580,947 தொகையான நிறுத்தி வைத்தல் வரி கழிக்கப்பட்டு கணக்கீடு செய்யப்பட்டிருந்தது. | அரசாங்க நிறுவனங்களுக்காக நிறுத்தி வைத்தல் வரி கழிக்கப்படுவதில்லை. | ஏற்றுக்கொள்கின்றோம். அந்த நிறுத்தி வைத்தல் வரியை மீண்டும் சபைக்கு கோரி இலங்கை வங்கி மற்றும் தேசிய சேமிப்பு வங்கிகளுக்கு கடிதம் மூலம் அறிவிக்கப்பட்டுள்ளது. |

| | | | |
|---|---|---|---|
| (ii) | நிலையான வைப்புக்கள் முதிர்வடையும் திகதியின் பிரகாரம் சரியாக வட்டி கணிப்பீடு செய்யப்படாமையின் காரணமாக 2018 ஆம் ஆண்டிற்குரிய ரூபா 111,414 தொகை குறைவாகவும், நடப்பாண்டிற்குரிய ரூபா 4,112,911 மற்றும் பெற வேண்டிய வட்டி ரூபா 3,427,672 தொகை அதிகரித்தும் கணக்கீடு செய்யப்பட்டிருந்தது. | நிலையான வைப்புக்கள் முதிர்ச்சியடையும் திகதியின் பிரகாரம் சரியாக வட்டி கணிப்பீடு செய்யப்பட வேண்டும். | ஏற்றுக்கொள்கின்றோம். 2019 ஆம் ஆண்டின் நிலையான வைப்புக்களின் முதலீட்டு கணக்கு மற்றும் பெறவேண்டிய நிலையான வைப்பு வட்டி கணக்கு என்பவற்றில் தேவையான பதிவுகள் இட்டு சரிசெய்யப்பட்டுள்ளது. |
| (iii) | முத்திரைக் கட்டணங்களில் அறவிடும் அடிப்படையில் உள்ளூராட்சி திணைக்களத்திலிருந்து 2018 ஆம் ஆண்டில் பெறப்பட்ட ரூபா 29,384,000 பெறுமதியான 02 கம்பெக்டர்களுக்காக செலவிடப்பட்ட மூலதன செலவினம் ரூபா 7,108,250 தொகை 2019 ஆம் ஆண்டில் சரி செய்யப்படாமையின் காரணமாக அறவிடக் கூடிய பயன்பாட்டு சேவைகள் கணக்கு மற்றும் மாகாண சபை கடன் கணக்குகளின் மீதிகள் என்பன அந்த பெறுமானத்தினால் அதிகரித்து காண்பிக்கப்பட்டிருந்தது. | சரியாக கணக்கீடு செய்யப்பட வேண்டும். | ஏற்றுக்கொள்கின்றோம். 2020 ஆம் ஆண்டின் இறுதிக் கணக்கு தயாரிக்கும் போது சரிசெய்யப்படும். |

| | | | |
|---|---|---|---|
| (iv) | மீளச் செலுத்தப்பட்ட ரூபா 35,000 தொகையான ஊழியர் பிணை வைப்பு, அந்த கணக்கில் பதியப்பட்ட போதிலும் முதலீட்டு வட்டி கணக்கில் பதியப்பட்டிருக்கவில்லை. | சரியாக கணக்குகள் தயாரிக்கப்பட வேண்டும். | ஏற்றுக்கொள்கின்றோம். 2020 ஆம் ஆண்டின் இறுதிக் கணக்கு தயாரிக்கும் போது சரிசெய்யப்படும். |
| (v) | பட்டோலைகள் மற்றும் பேரேட்டு கணக்குகளில் ஆரம்ப மீதிகளில் காணப்பட்ட வேறுபாடுகளுக்கான காரணங்களை கண்டறிந்து அதன் பிரகாரம் கணக்குகளை சீராக்குவதற்கு பதிலாக 05 சந்தர்ப்பங்களின் போது ரூபா 3,144,480 தொகை நாட்குறிப்பு பதிவுகளின் மூலம் கணக்குகளில் சீராக்கப்பட்டிருந்தது. | பட்டோலைகள் மற்றும் பேரேட்டுக் கணக்குகளின் மீதிகளை இணக்கம் செய்து சரி செய்யப்பட வேண்டும். | கருத்து தெரிவிக்கப்படவில்லை. |

## (ஆ) இணக்கஞ் செய்யப்படாத கணக்குகள்

------------------------------------------------------------

| | கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| | ---------------------------------------- | ------------------------ | ----------------------------- |
| (i) | நிதிக்கூற்றுக்களில் காண்பிக்கப்படுகின்ற 09 கணக்கு விடயங்களுக்குரிய மீதிகள், அவைகளுக்குரிய பட்டோலைகள் / அறிக்கைகளில் காண்பிக்கப்பட்ட | உரிய மீதிகளின் வேறுபாடுகளை இணக்கம் செய்து கணக்குகளில் சரிசெய்வதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். | இனங்காணப்பட்ட வேறுபாடுகள் சிலவற்றை 2020 இல் சரி செய்யப்படும் என குறிப்பிட்டுக் கொள்கின்றோம். |

| | | | |
|---|---|---|---|
| | மீதிகளுடன் ஒப்பீடு செய்யும் போது நிதிக் கூற்றுக்களில் ரூபா 7,654,906 தொகை அதிகரித்தும் ரூபா 295,806 தொகை குறைத்தும் காண்பிக்கப்பட்டிருந்தது. | | |
| (ii) | நகர அபிவிருத்தி நிதிய முதலீட்டுக் கணக்கின் மீதி ரூபா 30,118,276 ஆக இருந்த போதிலும், அந்த வைப்புக் கணக்கின் மீதி ரூபா 36,979,385 ஆனமையினால் ரூபா 6,861,109 தொகையான வேறுபாடு காணப்பட்டது. | மீதிகளின் வேறுபாடுகளை இணக்கம் செய்து கணக்குகளில் சரிசெய்வதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். | கருத்து தெரிவிக்கப்படவில்லை. |
| (iii) | 2019 சனவரி 01 இல் உள்ளவாறு வியாபார வரி பதிவேட்டின் பிரகாரம் நிலுவை ரூபா 201,685 ஆக இருந்த போதிலும், நிதிக் கூற்றுக்களின் பிரகாரம் வியாபார வரி நிலுவை ரூபா 534,685 ஆனமையால் ரூபா 333,000 வேறுபாடு காணப்பட்டது. | மீதிகளின் வேறுபாடுகளை இணக்கம் செய்து கணக்குகளில் சரிசெய்வதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். | கருத்து தெரிவிக்கப்படவில்லை. |

**(இ) பெறவேண்டிய கணக்குகள்**

--------------------------------------------

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| 2010 முதல் 2019 ஆம் ஆண்டு வரையான காலப்பகுதிக்குரிய வாடிக்கையாளர்களினால் | பெறவேண்டிய பணத்தை அறவிடுவதற்கு | ஏற்றுக்கொள்கின்றோம். அறவிடுவதற்கு நடவடிக்கை |

| | | |
|---|---|---|
| வழங்கப்பட்ட ரூபா 311,581 பெறுமதியான 09 காசோலைகள் மதிப்பிழந்திருந்த போதிலும், அந்த பணத்தை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | நடவடிக்கை எடுக்க வேண்டும். | எடுக்கப்பட்டுள்ளது என அறிவிக்கப்பட்டுள்ளது. |

**(ஈ) கணக்காய்விற்கான எழுத்துமூல சான்றுகள் இன்மை**

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| ரூபா 122,216,801 தொகையான 09 கணக்கு விடயங்களுக்காக தேவையான பட்டோலைகள் கணக்காய்விற்காக சமர்ப்பிக்கப்படவில்லை. | மீதிகளை உறுதிப்படுத்துவதற்காக தேவையான பட்டோலைகள் அல்லது தகவல்கள் சமர்ப்பிக்கப்பட வேண்டும். | கருத்து தெரிவிக்கப்படவில்லை. |

## 1.4 இணங்காமைகள்

### 1.4.1 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடன் இணங்காமை

| சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடனான தொடர்பு | இணங்காமைகள் | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (அ) இலங்கை சனநாயக சோஷலிசக் குடியரசின் தாபன விதிக் கோவை | | | |
| XXIV ஆம் | ஊழியர் கடனை அறவிட | XXIV ஆம் | ஏற்றுக்கொள்கின்றோம். |

| | | | |
|---|---|---|---|
| அத்தியாயத்தின் 4.4 மற்றும் 4.5 ஆம் பிரிவுகள் | முடியாத போது பிணையாளரிடம் இருந்தோ அல்லது ஓய்வூதிய பணிக்கொடையிலிருந்தோ அறவிட வேண்டிய போதிலும், 18 உத்தியோகத்தர்களிடம் இருந்து அறவிட வேண்டிய ரூபா 574,983 தொகையை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | அத்தியாயத்தின் 4.4 மற்றும் 4.5 ஆம் பிரிவுகளின் பிரகாரம் நடவடிக்கை எடுக்க வேண்டும். | பிணையாளர்களிடம் இருந்து அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. |

(ஆ) இலங்கை சனநாயக சோஷலிசக் குடியரசின் நிதிப் பிரமாணம்

---

| | | | |
|---|---|---|---|
| நிதிப் பிரமாணம் 371(2)(இ) மற்றும் (5) | பெறப்பட்ட உப கட்டுநிதிக்குரிய பணிகள் நிறைவு பெற்றதும் உடனடியான தீர்த்து வைக்கப்பட வேண்டிய போதிலும், 32 முதல் 281 நாட்கள் வரையான கால தாமதத்துடன் ரூபா 225,000 தொகையான முற்பணம் தீர்த்து வைக்கப்பட்ட 10 சந்தர்ப்பங்கள் காணப்பட்டன. | நிதிப் பிரமாணம் 371(2)(இ) மற்றும் (5) இன் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | ஏற்றுக்கொள்கின்றோம். எதிர் காலத்தில் தாமதங்களை தவிர்த்துக் கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். |

## 2. நிதி மீளாய்வு

------------------------

### 2.1 நிதி விளைவுகள்

------------------------------

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் 2019 திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்காக சபையின் மீண்டுவரும் செலவினத்தை விஞ்சிய வருமானம் ரூபா 416,367,303 ஆக இருந்ததுடன் அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டின் மீண்டெழும் செலவினத்தை விஞ்சிய வருமானம் ரூபா 62,788,166 ஆக இருந்தது.

### 2.2 நிதிக் கட்டுப்பாடு

------------------------------

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
| --- | --- | --- |
| 2015 ஆகஸ்ட் மாதத்தின் போது மூடப்பட்டிருந்த நடைமுறைக் கணக்கில் காணப்பட்ட பணம் ரூபா 2,052,258 தொகை மீளாய்வாண்டின் கணக்கில் காண்பிக்கப்பட்டிருந்தது. | தீர்த்து வைப்பதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். | விசாரணையின் பின்னர் தயாரிக்கப்பட்ட அறிக்கை உதவி உள்ளூராட்சி ஆணையாளர் அலுவலகத்திற்கு அனுப்பப்பட்டுள்ளது. பிரச்சினைக்கு தீர்வு பெற்றுக் கொள்ளப்பட்டதன் பின்னர் கணக்குகளில் சீராக்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். |

### 2.3 வருமான நிர்வாகம்

----------------------------------

#### 2.3.1 மதிப்பிடப்பட்ட வருமானம், சிட்டையிடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம்

--------------------------------------------------------------------------------------------------------------------------------

மீளாய்வாண்டு மற்றும் முன்னைய ஆண்டிற்குரியதாகச் சமர்ப்பிக்கப்பட்டிருந்த மதிப்பிடப்பட்ட வருமானம், சிட்டையிடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம் தொடர்பான தகவல்கள் கீழே காண்பிக்கப்படுகின்றது.

| | வருமானம் | 2019 மதிப்பிடப்பட்ட வருமானம் | சிட்டையிடப்பட்ட வருமானம் | சேகரிக்கப்பட்ட வருமானம் | திசெம்பர் 31 இல் உள்ளவாறு மொத்த நிலுவை | 2018 மதிப்பிடப்பட்ட வருமானம் | சிட்டையிடப்பட்ட வருமானம் | சேகரிக்கப்பட்ட வருமானம் | திசெம்பர் 31 இல் உள்ளவாறு மொத்த நிலுவை |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | ரூபா 000' | ரூபா 000' | ரூபா 000' | ரூபா 000' | ரூபா 000' | ரூபா 000' | ரூபா 000' | ரூபா 000' |
| (i) | வீதவரியும் வரியும் | 111,112 | 101,109 | 105,690 | 57,384 | 102,506 | 109,778 | 109,821 | 61,387 |
| (ii) | வாடகை | 28,095 | 23,263 | 27,719 | 4,722 | 21,167 | 26,334 | 25,012 | 4,487 |
| (iii) | அனுமதிப்பத்திரக் கட்டணங்கள் | 1,904 | - | 1,783 | - | 1,203 | - | 1,602 | - |
| (iv) | ஏனைய வருமானம் | 332,528 | - | 280,722 | - | 260,565 | - | 31,834 | - |
| | | 473,639 | 124,372 | 415,914 | 62,106 | 385,441 | 136,112 | 168,269 | 65,874 |

## 2.3.2 வீதவரியும் வரியும்

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| மீளாய்வாண்டிற்காக சிட்டையிடப்பட்ட ஆதன வரி வருமானம் ரூபா 91,296,836 ஆக இருந்த போதிலும், அதில் ரூபா 31,044,560 தொகை அதாவது, 23 சதவீதத்தை அறவிடுவதற்கு சபை தவறியிருந்தது. | ஆதன வரி வருமானத்தை அறவிடுவதற்கு தாமதமின்றி நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | 2019 ஆம் ஆண்டில் சிட்டையிடப்பட்ட வருமானத்தில் 76.74 சதவீதம் சேகரிக்கப்பட்டுள்ளது. 2018 மற்றும் 2019 ஆம் ஆண்டுகளின் போது காணப்பட்ட நிலுவை மீதியில் 50.93 சதவீதம் சேகரிக்கப்பட்டுள்ளது. |

### 2.3.3 வாடகை

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| 2019 திசெம்பர் 31 இல் உள்ளவாறு சபைக்குச் சொந்தமான 155 கடைகளில் இருந்து ரூபா 4,722,410 தொகை அறவிடுவதற்கு தவறியிருந்தது. | நிலுவை கடை வாடகையை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | கருத்து தெரிவிக்கப்படவில்லை. |

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 செயலாற்றல்

நகர சபைகள் அதிகாரச்சட்டத்தின் 4 ஆவது பிரிவின் கீழ் பொதுமக்கள் சுகாதாரம், பொது பயன்பாட்டுச் சேவைகள் மற்றும் பொது வீதிகள் தொடர்பான விடயங்களை முறைப்படுத்தல் மற்றும் நிர்வகித்தல், பொதுமக்களின் பொழுதுபோக்கு வசதிகள் மற்றும் நலன்புரி போன்ற சபையினால் நிறைவேற்ற வேண்டியிருந்த குறிக்கோள்களை நிறைவேற்றுதல் தொடர்பாக வெளிப்படுத்தப்பட்ட விடயங்கள் கீழே காண்பிக்கப்படுகின்றது.

### (அ) கைவிடப்பட்ட இலக்குகள்

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| (i) மீளாய்வாண்டின் போது பொது நிதியத்தின் கீழ் அமுல்படுத்தப்பட வேண்டியருந்த ரூபா 6,566,468 பெறுமதியான 09 செயற்திட்டங்களில் ரூபா 540,000 பெறுமதியான 03 செயற்திட்டங்கள் பிரதேச செயலகத்தினால் நிறைவேற்றுதல், ரூபா 1,841,468 பெறுமதியான 02 | முறையான விசாரணையொன்றை மேற்கொண்டு பிரச்சினைகளுக்கு தீர்வு கண்டு செயற்திட்டங்களை நிறைவேற்றுவதற்கு நடவடிக்கை | 06 செயற்திட்டங்கள் ஏற்பட்டுள்ள பிரச்சினைகளின் காரணமாக மேற்கொள்ளப்படவில்லை. |

| | | |
|---|---|---|
| செயற்திட்டங்களுக்காக எதிர்ப்புகள் எழுந்திருந்தமை மற்றும் ரூபா 4,185,000 பெறுமதியான 04 செயற்திட்டங்கள் ஏனைய பல்வேறு விடயங்களின் காரணமாகவும் நிறைவேற்றுதல் இரத்துச் செய்யப்பட்டிருந்தது. | எடுக்கப்பட வேண்டும். | |
| (ii) 2019 ஆம் ஆண்டின் போது மாகாண சபை நிதி உதவியின் கீழ் அமுல்படுத்துவதற்காக உடன்படிக்கை செய்யப்பட்ட 158 செயற்திட்டங்களில் ரூபா 24,825,000 பெறுமதியான 15 செயற்திட்டங்களும், கம்பெரலிய இன் கீழ் உடன்படிக்கை செய்யப்பட்ட 64 செயற்திட்டங்களில் ரூபா 14,595,000 பெறுமதியான 25 செயற்திட்டங்களும், சூகித புறவற இன் கீழ் உடன்படிக்கை செய்யப்பட்ட 08 செயற்திட்டங்களில் 05 செயற்திட்டங்களும் அமுல்படுத்தப்பட்டிருக்கவில்லை. | உடன்படிக்கை செய்யப்பட்ட செயற்திட்டங்களை நிறைவேற்றுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | செயற்திட்ட அதிகாரத்தரப்பினரான மாகாண சபை மற்றும் பிரதேச செயலகங்களினால் இரத்துச் செய்யப்பட்டிருந்தது. |

**(ஆ) இலக்குகளை நிறைவேற்றுவதில் தாமதம்**

-----------------------------------------------------------------

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| மீளாய்வாண்டின் போது பொது நிதியத்தின் மூலம் அமுல்படுத்துவதற்காக உடன்படிக்கை செய்யப்பட்ட 200 செயற்திட்டங்களுக்கு இடையே ரூபா 6,384,000 பெறுமதியான 10 | உரிய கால எல்லையில் நிறைவேற்றுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | ஏற்றுக்கொள்கின்றோம். பொது மக்களின் எதிர்ப்பு, எல்லைப் பிரச்சினைகள், சட்ட ரீதியான பிரச்சினைகள், காலநிலை காரணங்கள் |

| | | |
|---|---|---|
| செயற்திட்டங்கள் காலநிலை காரணங்கள், உடன்படிக்கை செய்வதில் தாமதம் மற்றும் நிதி ஏற்பாடு கிடைக்கப் பெறாமை போன்ற காரணங்களினால் வேலையினை பூர்த்தி செய்வதற்கு முடியாதிருந்தது. | | போன்றவற்றினால் பிரச்சினைகள் தீர்த்து வைக்கப்படும் வரை செயற்திட்டத்தை அமுல்படுத்துவதில் தாமதம் ஏற்பட்டிருந்தது. |

**(இ) கழிவுப் பொருள் முகாமைத்துவம்**

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| சபையினால் கழிவுப் பொருட்கள் சேகரித்தல் உரிய பிரகாரம் முகாமைத்துவம் செய்யப்படாமையினால் கழிவுப் பொருள் முகாமைத்துவ அதிகாரசபைக்கு ரூபா 16,470,000 தொகை மேலதிகமாக செலுத்த வேண்டி ஏற்பட்டிருந்தது. | கழிவுப் பொருட்களை சேகரித்தல் சரியான பிரகாரம் முகாமைத்துவம் செய்யப்பட வேண்டும். | ஏற்றுக் கொள்கின்றோம். கழிவுப் பொருட்களை வேறுபிரித்து வழங்குதல் தொடர்பாக பிரதேச வாசிகளுக்கு அறிவிக்கும் நிகழ்ச்சித் திட்டமும் அமுல்படுத்தப்பட்டுள்ளது. |

## 3.3 மனித வள முகாமைத்துவம்

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| (அ) **ஊழியர் வெற்றிடம்** | | |
| மீளாய்வாண்டின் இறுதி வரையில் 24 வெற்றிடங்கள் காணப்பட்டன. | தேவையான வெற்றிடங்களை நிரப்புவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | ஆட்சேர்ப்பு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுகின்றது. |

(ஆ) **ஊழியர் கடன்**

--------------------------

| | | | |
|---|---|---|---|
| (i) | 1988 முதல் 2019 ஆம் ஆண்டு வரையான காலப்பகுதியில் மரணமடைந்த 07 ஊழியர்களிடம் இருந்து ரூபா 249,103 தொகையும், சேவையை விட்டுச் சென்ற 07 ஊழியர்களிடம் இருந்து ரூபா 121,101 தொகையும், ஓய்வுபெற்றுச் சென்ற 03 ஊழியர்களிடமிருந்து ரூபா 34,639 தொகையும், இடம் மாற்றலாகிச் சென்ற 02 ஊழியர்களிடம் இருந்து ரூபா 195,493 தொகையும் ஆக கூட்டுமொத்தமாக ரூபா 600,336 தொகையான கடன் மீதியை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படவில்லை. | கடன் பணத்தை தாமதமின்றி அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | ஏற்றுக் கொள்கின்றோம். பதிவேடுகளை பரீட்சித்து ஏற்பட்டுள்ள குறைபாடுகள் சரி செய்யப்படும். |
| (ii) | 2018 திசெம்பர் 31 இல் உள்ளவாறு 05 ஊழியர்களிடம் இருந்து அறவிட வேண்டிய ரூபா 117,317 தொகையான கடன் மீதி அறவிடப்படாதிருந்ததுடன், அறவிட வேண்டியதாக கணக்கீடு செய்தலும் இடம் பெற்றிக்கவில்லை. | கடன் பணத்தை தாமதமின்றி அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | பதிவேடுகளை பரீட்சித்து ஏற்பட்டுள்ள குறைபாடுகள் சரி செய்யப்படும். |

## 3.4 செயற்பாட்டு செயற்திறன்மைகள்

----------------------------------------------------

| | கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| | ---------------------------------------- | ----------------------- | ---------------------------- |
| (அ) | கடை வாடகை உடன்படிக்கையின் பிரகாரம் வாடகையாளர் 06 மாதங்களுக்கு மேற்பட்ட காலம் வாடகை செலுத்தாமல் புறக்கணித்து இருப்பாராயின் வாடகை உடன்படிக்கை ஒரு தரப்பாக இரத்துச் செய்யும் அதிகாரம் நகர சபைக்கு உரியதாக இருந்த போதிலும், வாடகை தாமதமான கடைகளில் வாடகை உடன்படிக்கையை இரத்துச் செய்து அந்த கடையை நகர சபைக்கு கையேற்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | வாடகை உடன்படிக்கையின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | ஏற்றுக்கொள்கின்றோம். எதிர்காலத்தில் 06 மாதங்கள் கடை வாடகை நிலுவையாக காணப்பட்ட கடை உரிமையாளர்களின் உடன்படிக்கையை இரத்துச் செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். |
| (ஆ) | நாவின்ன விளையாட்டு அரங்கை கைப்பற்றுவதற்காக நகர அபிவிருத்தி அதிகார சபைக்கு நடப்பாண்டின் போது ரூபா 13,717,577 தொகையை உள்ளடக்கிய கூட்டுமொத்தமாக ரூபா 24,554,972 தொகை செலுத்தப்பட்ட போதிலும், 2019 திசெம்பர் 31 ஆம் திகதி வரையிலும் உரித்துறுதி மூலம் கையேற்கப்பட்டிருக்கவில்லை. | கையேற்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | ஏற்றுக்கொள்கின்றோம். 2019.01.22 ஆம் திகதி வரையில் பணம் செலுத்தப்பட்டு பூர்த்தி செய்யப்பட்டமையினால் விளையாட்டரங்கை கையேற்பதற்கு தேவையான நடவடிக்கைகளை எடுக்குமாறு தலைவர் நகர அபிவிருத்தி அதிகார சபையிடமிருந்து கோரப்பட்டுள்ளது. |

## 3.5 இனங்காணப்பட்ட நட்டம்

------------------------------------------

| | கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (அ) | 2010 முதல் 2019 ஆம் ஆண்டு வரையான காலப்பகுதியில் 87 அங்கத்தவர்களுக்கு விநியோகிக்கப்பட்ட ரூபா 43,227 பெறுமதியான 148 நூலக புத்தகங்கள் மீள பெறப்பட்டிருக்கவில்லை. | நூலக புத்தகங்களை பெற்றுக் கொள்வதற்கோ அல்லது நட்டத்தை அறவிடுவதற்கோ நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | ஏற்றுக் கொள்கின்றோம். புத்தகங்களை மீள கையளிக்குமாறு கடிதங்கள் அனுப்பப்பட்ட போதிலும், கையளிக்கப்படாமையின் காரணமாக 2019.12.31 இல் உள்ளவாறான பொருள் மெய்மெய்யாய்வு பயன்பாட்டு பதிவேட்டில் இருந்து அகற்றுவதற்கு பரிந்துரை செய்யப்பட்டுள்ளது. |
| (ஆ) | சபைக்குச் சொந்தமான வாகனம் ஒன்று 2017 நவம்பர் 03 ஆம் திகதி விபத்திற்கு உள்ளாகியிருந்ததுடன் ஆரம்ப அறிக்கையின் பிரகாரம் அந்த நட்டத்தின் மதிப்பீட்டு பெறுமதியான ரூபா 500,000 நிதிக்கூற்றுக்களில் வெளிப்படுத்தப்பட்டிருக்கவில்லை. | நிதிக் கூற்றுக்களில் வெளிப்படுத்தப்பட வேண்டும். | கருத்து தெரிவிக்கப்படவில்லை. |

| | | | |
|---|---|---|---|
| (இ) | 2018 ஆகஸ்ட் முதல் 2019 திசெம்பர் வரை கொள்வனவு செய்யப்பட்ட 11150 மின் குமிழ்களில் உத்தரவாத காலத்தை விஞ்சுவதற்கு முன் பழுதடைந்த 4928 மின்குமிழ்களில் 761 மின்குமிழ்கள் மீண்டும் மாற்றிப் பெற்றுக் கொள்ளப்பட்டிருக்கவில்லை. | உத்தரவாத காலத்தை விஞ்சுவதற்கு முன் சேவையினை பெற்றுக் கொள்ள வேண்டும். | ஏற்றுக் கொள்கின்றோம். மாற்றி பெற்றுக் கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். |
| (ஈ) | கேள்வி கோரும் போதும் மதிப்பீடு செய்வதற்குரிய தகவல்கள் கேள்வி ஆவணங்களுடன் கோரப்படாமையின் காரணமாக ஒரு வாகை ஆதனமொன்றுக்கு இரு தடவை கேள்வி கோருவதற்கு ஏற்பட்டமையினால் ரூபா 91,988 தொகையான நட்டம் ஏற்பட்டிருந்தது. | கேள்வி கோரும் போது உரிய தகவல்கள் கோரப்பட வேண்டும். | ஏற்றுக் கொள்கின்றோம். 2019.01.17 ஆம் திகதி பொதுச் சபையில் எடுக்கப்பட்ட தீர்மானத்தின் பிரகாரம் இரண்டாவது தடவையாக கேள்வி கோர வேண்டி ஏற்பட்டிருந்தது. |
| (உ) | கேள்வி கோருதலின் குறைபாடுகள் காரணமாக ஒரு வாடகை ஆதனம் நடப்பாண்டிற்காக 2019 திசெம்பர் 01 ஆம் திகதி உடன்படிக்கை செய்யப்பட்டமையால் ரூபா 1,100,000 வருமானம் சபைக்கு இழக்கப்பட்டிருந்தது. | வருடாந்தம் வாடகைக்கு வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | ஏற்றுக் கொள்கின்றோம். 2019 ஆம் ஆண்டில் வாடகைக்கு வழங்குவதற்காக 2018 திசெம்பர் 28 ஆம் திகதி கேள்வி திறக்கப்பட்ட போதிலும், 2019.01.17 ஆம் திகதி நடைபெற்ற பொதுச் சபையினால் அதனை மீண்டும் கேள்வி கோர வேண்டியதாக தீர்மானிக்கப்பட்டமையின் காரணமாக குழுவினால் நடப்பாண்டின் கேள்விகாரருக்கு வழங்குவதற்கு தீர்மானிக்கப்பட்டிருந்தது. |